அலிகேட்டர்



எவேலின் ஷா

படங்கள்: பிரான்சிஸ் ஜ்வய்பல்

தமிழில்: பிரியதரிசினி இலங்கைவேந்தன்





அலிகேட்டர்



அலிகேட்டர்

எவேலின் ஷா

படங்கள்: பிரான்சிஸ் ஜ்வய்பல்

தமிழில்: பிரியதரிசினி இலங்கைவேந்தன்





விடியும் பொழுதில் மூடுபனி சதுப்பு
நிலத்தை மறைக்கிறது.
அது மரங்களையும் செடிகளையும்
மறைக்கிறது.
அது ஓய்வெடுக்கும் விலங்குகளை
மறைக்கிறது.





பொழுது புலர்ந்து வெளிச்சமாகிறது.
விலங்குகள் நகரத்
தொடங்குகின்றன.



ரக்கூன்கள் மற்றும் கரடிகள்
தங்கள் கால்களை நீட்டி சோம்பல்
முறிக்கிறது.
பறவைகள் தலையை உயர்த்தி
சுற்றிப் பார்க்கின்றன.



ஓடைக்கு அருகில் புல்வெளியில்
ஒரு அலிகேட்டர் அமர்ந்திருக்கிறது.



அலிகேட்டர் பத்து அடி நீளம்
கொண்டது.
அது மிகவும் பெரிதாக இருப்பதால்
மற்ற எல்லா
விலங்குகளிடமிருந்தும்
பாதுகாப்பாக இருக்கும்.

அந்த அலிகேட்டர் நகரத்
தொடங்குகிறது.
இது ஒரு பெண் அலிகேட்டர்.
சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, அது
ஒரு ஆண் முதலையுடன் இனம்
சேர்ந்தது.




இப்போது அது முட்டையிட
வேண்டிய நேரம்
வந்துவிட்டது.

அவளுடைய முட்டைகளுக்காக
ஒரு பெரிய கூடு கட்ட
வேண்டும்.
தனது கூட்டிற்காக பல நாட்கள்
வேலை செய்கிறாள்.
புல்லை மிதித்து தனது கூட்டை
தட்டையாக ஆக்குகிறாள்.
சிறிய மரங்களிலிருந்து
கிளைகளையும்
இலைகளையும்
அவள் தன் பெரிய வாயால்
கிழிக்கிறாள்.
அவள் அவற்றை அந்த
தட்டையான புல் மீது இழுத்து
வைக்கிறாள்.



அவள் நாணல்களை கிழித்து தன் கூட்டிற்கு இழுத்துச் செல்கிறாள்.
அவள் தண்ணீரில் மூழ்கி நீர் தாவரங்களை இழுத்தெடுக்கிறாள்.
தாவரங்களின் வேர்களில் சேறு உள்ளது.
அலிகேட்டர் அவற்றை தன் கூட்டில் வைக்கிறாள்.



கூடு மேலும் மேலும் உயரமாக
வளர்கிறது.
இது தாவரங்கள், கிளைகள் மற்றும்
சேற்றினால்
உருவான அடர்த்தியான ஈரமான
மேடு.
இது கிட்டத்தட்ட இரண்டு அடி
உயரம் கொண்டது.
கூட்டில் அலிகேட்டர் நாற்பது
முட்டைகளை இடுகிறாள்.
முட்டைகளை மேலும் செடிகளாலும்
சேற்றாலும் மூடுகிறாள்.
சேறும் செடிகளும் முட்டைகளை
மறைக்கின்றன.






முட்டைகளைப் பார்க்க
முடியாது.
ஆனால் சில விலங்குகளால்
அவற்றை
கூட்டிலிருந்து தோண்டி எடுக்க
முடியும்.
ரக்கூன்கள் மற்றும் கரடிகள்
முதலை முட்டைகளை
உண்ணும்.
ஒரு கரடியால் நாற்பது
முட்டைகளையும் உண்ண
முடியும்.

எனவே தாய் அலிகேட்டர்
பெரும்பாலான
நேரங்களில்
தன் கூட்டிற்கு அருகேயே
இருப்பாள்.





ஆனால் சில நேரங்களில் அவள்
கூட்டை விட்டு
வெளியேற வேண்டியிருக்கும்.
அவள் சாப்பிட மீன் அல்லது
ஆமைகளைக் தேடிச்செல்வாள்.
அப்படி ஒரு காலை அலிகேட்டர்
தன் கூட்டிலிருந்து விலகி
இருக்கிறாள்.
அவள் உணவைத்
தேடிக்கொண்டிருக்கிறாள்.


ஒரு ரக்கூன் கூடுக்கு அருகில்
உள்ள
மரங்களின் வழியாக வருகிறது.
அதுவும் உணவைத் தேடுகிறது.



ரக்கூன் அலிகேட்டரின் கூட்டைப்
காண்கிறது.
முட்டைகளை எடுக்க அது
மேட்டை தோண்டத் தொடங்குகிறது.



திடீரென்று, தாய் அலிகேட்டர்
தன் பெரிய தலையை
தண்ணீரிலிருந்து உயர்த்துகிறாள்.
சத்தமாக பெருமூச்சுவிட்டாள்
சத்தமாக சீறினாள்.






அவள் கூட்டை நோக்கி
விரைகிறாள்.
ரக்கூன் முடிந்தவரை
வேகமாக கூட்டைவிட்டு
ஓடுகிறது.



கோடை காலம் கடந்தது.
தாய் முதலை இரண்டு மாதங்களாக
தனது முட்டைகளைப் பாதுகாத்து
வருகிறாள்.



ஆகஸ்ட் மாத இறுதியில் ஒரு
இரவில்,
கூட்டிற்கு அருகே அவள்
ஓய்வெடுக்கிறாள்.



திடீரென்று, அவளுக்கு
விசித்திரமான சத்தம் கேட்கிறது.
ஓடையில் இருவர்
படகோட்டுகிறார்கள்.



அவர்கள் அலிகேட்டர்களை
தேடும் வேட்டைக்காரர்கள்.
அவர்களுக்கு ஒரு அலிகேட்டாரை
சுடவேண்டும்.
சுட்டு அவர்களுக்கு அதனுடைய
தோலை விற்கவேண்டும்.






தாய் அலிகேட்டர் ஆடாமல்
அசையாமல் அமர்ந்திருக்கிறது.
ஒரு வேட்டைக்காரன் அவளை
நோக்கி துப்பாக்கியால்
சுடுகிறான்.
குண்டு அவள் முதுகின் மேல்
பகுதியைத் தாக்குகிறது.

ஆனால் அவளுக்கு எந்த காயமும்
இல்லை.
அவள் தன் குட்டையான தடிமனான
கால்களை அவள் உடலோடு மடித்துக்
கொள்கிறாள். அவள் தன்
சக்திவாய்ந்த வாலை அசைக்கிறாள்.
அவள் ஓடையில் குதித்து
தண்ணீருக்கு அடியில் மறைந்து
விடுகிறாள்.





ஒடையில் சற்று தூரம் தள்ளி
அவள் மீண்டும் மேலே
வருகிறாள்.
மிதக்கும் மரக்கட்டை போல
அவள் அசையாமல்
இருக்கிறாள்.
சற்று நேரம் கழித்து அவள் தன்
கூட்டுக்குத் திரும்பிச் செல்ல
முயற்சிக்கிறாள்.
வேட்டைக்காரர்கள் இன்னும்
அங்கேயே இருக்கிறார்கள்.

அவள் தன் கூட்டிலிருந்து விலகி இருக்க வேண்டும். கூட்டுக்குள்ளே குட்டி அலிகேட்டர்கள் குஞ்சு பொரிக்கத் தொடங்குகின்றன. மேலும் அதிகமான குட்டிகள் அவற்றின் முட்டை ஓடுகளிலிருந்து வெளியே வருகின்றன. ஆனால் அவைகளால் கூட்டை விட்டு வெளியேற முடியாது.






மூடியிருக்கும் தாவரங்கள்
வழியாக அவைகளால் வெளியே
வர முடியாது.
அவை விரைவில்
வெளியேறாவிட்டால், அவை
இறந்துவிடும்.
முட்டை பொரிந்து வெளியே வந்த
பிறகு அவற்றுக்கு காற்று உணவும்
தேவை.

தாய் அலிகேட்டர் அவற்றைக்
வெளிக்கொணர வேண்டும்.
ஆனால் அவளால் கூடுக்குத்
திரும்ப முடியாது.



பின்னர்
வேட்டைக்காரர்கள்
மற்றொரு அலிகேட்டர்
தண்ணீரிலிருந்து
ஏறிவருவதை
பார்க்கிறார்கள்.
அது தாயை விடப்
பெரியது.
அவர்கள் அதை நோக்கிப்
படகோட்டி
செல்கின்றனர்.






வேட்டைக்காரர்களில் ஒருவர் அதை
நோக்கி சுடுகிறார்,
ஆனால் குண்டு அதைத்
தாக்கவில்லை.
அலிகேட்டர் உருக்கமாக கர்ஜிக்கிறது.
அது படகைப் நோக்கி
நகரத்தொடங்கியது.



ஒரு வேட்டைக்காரன் படகு
முட்டி கீழே விழுகிறான்.

மற்றொரு வேட்டைக்காரன்
படகை முடிந்தவரை
வேகமாகத் துடுப்பு போட்டு
நகர்த்தினான்.




தாய் அலிகேட்டர் தன்
கூட்டிற்குத் திரும்ப இது
பாதுகாப்பான நேரம்.
அவள் தண்ணீரிலிருந்து
ஏறி அதன் அருகே சற்று
ஓய்வெடுக்கிறாள்.





கூட்டுக்குள் குட்டி அலிகேட்டர்கள்
எழுப்பும், மென்மையான
ஒலிகளை அவள் கேட்கிறாள்.
அவள் கூட்டின் ஒரு பகுதியை
சுத்தம் செய்கிறாள்.




நாற்பது நெளியும் குட்டி
முதலைகள் இருண்ட
கூட்டிலிருந்து காலை
வெளிச்சத்தை நோக்கி வெளியே
வருகின்றன.
அவை தாயைப் போலவே
தோற்றமளிக்கிறது.
ஆனால் அவற்றின் நீளம் ஒன்பது
அங்குலம் மட்டுமே.



அவை அவளிடம் விரைந்து
செல்கின்றன.
அவள் மென்மையாக உறுமுகிறாள்.

அவை ஒன்றாக
தங்கியிருந்தன.
சில நாட்களுக்குப் பிறகு
தாய் உணவைத் தேடி
தண்ணீரில் குதிக்கிறாள்.






தன்னை நோக்கி இருள் ஒன்று
வருவதைக் காண்கிறாள்.
அவள் மிகவும்
அமைதியாகிறாள்.
அந்த இருள் ஒரு மீன் கூட்டம்.
கூட்டத்தில் நூற்றுக்கணக்கான
மீன்கள் உள்ளன.
அவை நெருங்கி வருகின்றன.


தன் தடிமனான வாலை அசைத்து,
சில மீன்களை கரையில் வீசுகிறாள்.
அவள் தண்ணீரிலிருந்து வெளியே
வந்து
மீனை மெல்லத் தொடங்குகிறாள்.
அவளுடைய குட்டிகள் அவள்
வாயிலிருந்து விழும்
சிறிய மீன் துண்டுகளை
சாப்பிடுகின்றன.





சில நாட்களில் குட்டிகள்
தங்களுக்கான உணவை
தானே வேட்டையாடத்
தொடங்குகின்றன.
அவை பெரிதாக
வளர்கின்றன.






குளிர்காலம் வரும்போது,
அவை குகைகளில்
ஓய்வெடுக்கும்.

வசந்த காலத்தில்
ஒவ்வொரு இளம்
முதலையும்
தனக்கான வாழ்விடத்தை
தேடிக்கொள்ளும்.

சுமார் பத்து ஆண்டுகளில், மற்ற
விலங்குகளினாலோ
வேட்டையர்களினாலோ அவை
கொல்லப்படாவிட்டால்,
அலிகேட்டர்கள் தனது தாயைப்
போல பெரியதாக இருக்கும்.





அவை தெற்கு சதுப்பு
நிலத்தில் வாழும் பல வகை
விலங்குகளில் ஒன்றாக
இருக்கும்.



முற்றும்